## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.21 /2026

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Suresh kumar |
| Father/Husband's Name | : Jayaraman |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்கலபட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.10.2023 ம் தேதி காலை 8.00 மணியளவில் நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணியிலிருந்தபோது, ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் செல்வம், நரேந்திரன் காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக திம்மாவரம், ஆத்தூர், வில்லிவாக்கம் அருகே கண்காணிக்க சென்ற போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், காலை 8.30 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, ஆத்தூர் தென்பாதி அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் சிவசக்தி என்கிற ராகுல் த.பெ.ஞானசேகரன் என்றும், ஆத்தூர் தென்பாதியை சேர்ந்தவர் என்று கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே

சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி சிவசக்தி என்கிற ராகுல் என்பவரை சோதனை செய்த போது, ஒரு பாலீத்தீன் பையிலிருந்து ஆஜர் எதிரி கொடுத்த வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்த போது 200 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 200 கிராம் கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் நரேந்திரன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நான் ரோந்து பணிக்கு சென்ற போது, என்னுடன் காவல் உதவி ஆய்வாளரும் காவலர் நரேந்திரனும் வந்திருந்தார்கள். நான் எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றேன் என்று என்னை விசாரித்த போது, சொல்லவில்லை. நான் ரோந்து பணிக்கு சென்ற போது, பொது நாட்குறிப்பில் குறிப்பு வைத்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்திற்கு எவ்வாறு சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் மக்கள் நடமாட்டம் இருக்கும் இடம் என்றால் சரிதான். உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.